# நில ஆர்ஜித வழக்குகளுக்கான சிறப்பு சார்பு நீதிமன்றம்,

# அரக்கோணம், ராணிப்பேட்டை மாவட்டம்.

முன்னிலை : **திரு. G. யுவராஜ், M.A., M.L.,**

சிறப்பு சார்பு நீதிபதி,

நில ஆர்ஜித வழக்குகளுக்கான சிறப்பு சார்பு நீதிமன்றம்,

அரக்கோணம், ராணிப்பேட்டை மாவட்டம்.

2026–ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 27–ஆம் நாள், வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண் 118/2025**

**(CNR No. TN-RP-07-000-134-2025)**

**(அரக்கோணம் சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண் 172/2019)**

1. J. ரமேஷ்
2. J. சுரேஷ் .. வாதிகள்

எதிராக

1. S. துரை கண்ணம்மாள் (காலமாகிவிட்டார்) (**)
2. உமாலட்சுமி (*)
3. இளவர் ஜெகன்
4. இளவர் தாரிகா

   3, 4 இளவர் பிரதிவாதிகளுக்காக அவர்களது
   தாயாரான 2–ம் பிரதிவாதி உமாலட்சுமி
5. பாலசுப்பிரமணி
6. பானுமதி
7. சாந்தி
8. ஜெயபாரதி
9. விஜயலட்சுமி (காலமாகிவிட்டார்) (**)
10. மனோகரன்

11. தினகரன்

12. சதீஷ்குமார்

13. ஜெயந்தி

14. ஜமுனா ராணி

15. இணை சார் பதிவாளர்–2,

அரக்கோணம் .. பிரதிவாதிகள்

***(*) இ.ம.வ. எண் 17/2022–ல் கடந்த 21.02.2022 அன்று பிறப்பித்த உத்தரவின்படி 2–ம் பிரதிவாதியின் பெயரையும், தாவா சொத்து விவரத்திலும் திருத்தம் செய்ய அனுமதிக்கப்பட்டு, வழக்குரையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.***

***(**) இ.ம.வ. எண் 6/2025–ல் கடந்த 11.08.2025 அன்று பிறப்பித்த உத்தரவின்படி 1, 9 பிரதிவாதிகள் காலமாகிவிட்டதாக வழக்குரையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.***

இவ்வழக்கானது கடந்த 05.07.2019 அன்று அரக்கோணம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 06.07.2019 அன்று அந்நீதிமன்ற அசல் வழக்கு 172/2019 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அதன்பின்னர் மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிபதி, ராணிப்பேட்டை அவர்களின் 04.12.2024 தேதியிட்ட உத்தரவின்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்ற உத்தரவிடப்பட்டு, வழக்குக் கோப்புக்களை இந்நீதிமன்றம் பெற்ற பின்னிட்டு கடந்த 02.06.2025 அன்று இந்நீதிமன்ற அசல் வழக்கு எண் 118/2025–ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ள இவ்வழக்கின் மீதான விசாரணையானது கடந்த 23.03.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, வாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் S. வெங்கடேசன் மற்றும் Y.R. பார்த்திபன் ஆகியோர்கள் ஆஜராகியும், 1, 5 முதல் 14 வரை பிரதிவாதிகள் தோன்றா தரப்பினர்களாகியும், 2 முதல் 4 வரை பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் P. ராமமூர்த்தி மற்றும் G. ஆனந்தன் ஆகியோர்கள் ஆஜராகியும், 15–ம் பிரதிவாதி தரப்பில் அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு. Y. பாபு அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்தையும்,

குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களையும், வழக்கு ஆவணங்களையும் பரிசீலித்தும், இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## தீர்ப்புரை

தாவா சொத்துக்களை மூன்று சம பாகங்களாக பிரித்து, அவைகளை 1, 9, 13 பிரதிவாதிகளுக்கு தலா 1/3 பாகம் ஒதுக்கியும், வாதிகள் மற்றும் 14-ம் பிரதிவாதியின் தாயாரான 13-ம் பிரதிவாதிக்கு ஒதுக்கும் 1/3 பாகத்திலிருந்து, தலா 1/9 பாகத்தை வாதிகளுக்கு ஒதுக்க வேண்டி ஒரு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரியும், தாவா சொத்தினை பொறுத்து பிரதிவாதிகள் எவ்வித பாராதீனமும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் மற்றும் வழக்கு செலவுத் தொகை கோரியும் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. **<u>தாவா மற்றும் திருத்தப்பட்ட தாவாவின் சுருக்கம் :</u>** வாதிகளின் தாத்தா மற்றும் பாட்டியின் பெயர் ராமமூர்த்தி மற்றும் அலமேலு அம்மாள் ஆகும். அவர்களுக்கு 1-ம் பிரதிவாதி துரைக்கண்ணம்மாள், 9-ம் பிரதிவாதி விஜயலட்சுமி மற்றும் 13-ம் பிரதிவாதி ஜெயந்தி ஆகியோர்கள் வாரிசுகள் ஆவார்கள். வழக்கிடையில் காலமான 1-ம் பிரதிவாதிக்கு சிவபிரகாசம் என்பவருடன் திருமணமாகி அவர் மூலமாக மோகன்பாபு என்ற மகனும், 5 முதல் 8 வரை பிரதிவாதிகளும் பிறந்தனர். மேற்படி மோகன்பாபு அவரது மனைவி மற்றும் மக்களான 2 முதல் 4 வரை பிரதிவாதிகளை அவரது வாரிசாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார். வழக்கிடையில் காலமான 9-ம் பிரதிவாதி, 10 முதல் 12 வரை பிரதிவாதிகளை அவரது வாரிசுகளாக விட்டு விட்டு காலமாகிவிட்டார். 13-ம் பிரதிவாதிக்கு ஜெயக்குமார் என்பவருடன் திருமணமாகி அவர் மூலமாக 14-ம் பிரதிவாதியும், வாதிகளும் பிறந்தனர்.

3. மேலும், தாவா சொத்தானது வாதிகளின் தாத்தாவுக்கு கடந்த 17.07.1984 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தின்படி பாத்தியப்பட்டதாகும். அதன் பிறகு அவர் அச்சொத்துக்கான வருவாய்துறை ஆவணங்களை அவர் பெயரில் பெயர் மாற்றம் செய்துக்கொண்டு அவர் காலம் வரை அனுபவித்து வந்தார். அவர் காலமான பிறகும், அவர் பெயரிலேயே இதுநாள்வரை வரி செலுத்தப்பட்டு வருகிறது. வாதிகளின் தாத்தா ராமமூர்த்தி கடந்த 12.11.2007 அன்றும், பாட்டி அலமேலு அம்மாள் 17.01.2015 அன்றும் காலமாகிவிட்டார்கள். அவர்களது காலத்திற்கு பிறகு வாதிகளும், 1 முதல் 14 வரை பிரதிவாதிகளும் தாவா சொத்தை பொறுத்து எவ்வித வில்லங்கமும் ஏற்படுத்தாமல் கூட்டாக அனுபவித்து வருகிறார்கள். எனவே, 1, 9, 13 பிரதிவாதிகள் மேற்படி ராமமூர்த்தி மற்றும் அலமேலு அம்மாள் ஆகியோர்களின் வாரிசுகள் என்ற வகையில் அவர்களுக்கு தலா 1/3 பாகம் உரிமை உள்ளது. காலமான மோகன்பாபு என்பவர்களின் வாரிசுகளான 2 முதல் 4 வரை பிரதிவாதிகளுக்கு தலா 1/45 பாகம் உரிமை உள்ளது. 1–ம் பிரதிவாதியின் இதர வாரிசுகளான 5, 6, 7, 8 பிரதிவாதிகளுக்கு தலா 1/15 பாகம் உரிமை உள்ளது. 9–ம் பிரதிவாதியின் வாரிசுகளான 10 முதல் 12 வரை பிரதிவாதிகளுக்கு தலா 1/9 பாகம் உரிமை உள்ளது. 13–ம் பிரதிவாதியின் வாரிசுகளான 14–ம் பிரதிவாதி மற்றும் வாதிகளுக்கு தலா 1/9 பாகம் உரிமை உள்ளது. மேற்படிவாறு வாதிகளுக்கு தாவா சொத்தில் பாகம் உள்ள நிலையில் பிரதிவாதிகளை அணுகி பாகம் பிரித்து தர கேட்டபோது, பாகம் பிரித்துதர முன்வர மறுத்துவிட்டார்கள். எனவே, மேற்படி பரிகாரங்கள் கோரி வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.

4. இவ்வழக்கு நிலுவையில் இருந்த நிலையில், 1, 9 பிரதிவாதிகள் காலமாகிவிட்டனர். அவர்களது வாரிசுகள் ஏற்கனவே வழக்கில் தரப்பில் இருந்தால், அவரகளது இறப்பு மட்டும் வழக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

5. **<u>2–ஆம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 3, 4 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள பதிலுரையின் சுருக்கம் :</u>** தாவாவில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்குப் புறம்பானவைகள். அவைகளை வாதிகளே சட்டப்படி நிரூபிக்க வேண்டும். தாவாவில் சொல்லியுள்ள உறவு முறை சரியாகும். தாவா சொத்தானது, ராமமூர்த்தி என்பவருக்கு கடந்த 17.07.1984 அன்று அவரது தாயார் ராஜம்மாள் என்பவர் எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின்படி பாத்தியப்பட்டது என்பதும், மேற்படி ராமமூர்த்தி மற்றும் அவரது மனைவி அலமேலு அம்மாள் காலமாகிவிட்டதாக சொல்லியுள்ளதும் உண்மை. ஆனால் மேற்படி ராமமூர்த்தியின் காலத்திற்கு பிறகு தாவா சொத்தினை வாதிகள் மற்றும் 1 முதல் 14 வரை பிரதிவாதிகள் கூட்டாக அனுபவித்து வருவதாக சொல்லியுள்ளது பொய்யாகும். மேற்படி ராமமூர்த்தி மற்றும் அவரது மனைவி அலமேலு அம்மாள் தம்பதிகளுக்கு துரைகண்ணம்மமாள், விஜயலட்சுமி, ஜெயந்தி என்ற 3 மகள்களும், மோகன்பாபு என்ற மகனும் பிறந்தனர். மேற்படி ராமமூர்த்தி காலமான பிறகு அவரது மனைவியான அலமேலு அம்மாள் மற்றும் துரைகண்ணம்மமாள், விஜயலட்சுமி, ஜெயந்தி என்ற 3 மகள்களும், மோகன்பாபு என்ற மகனும் சேர்ந்து கடந்த 30.06.2010 அன்று ஒரு பதிவு செய்யப்பட்ட பாகப் பிரிவினைப் பத்திரத்தை எழுதிக் கொண்டனர். அதில் அலமேலு அம்மாள், துரைகண்ணம்மமாள், விஜயலட்சுமி ஆகியோருக்கு தலா ரூ.3,50,000/–ம் ஒதுக்கப்பட்டது. மற்றொரு மகளான ஜெயந்தி மற்றும் மகன் மோகன்பாபு என்பவர்களுக்கு D மற்றும் E அட்டவணை சொத்துக்கள் பாகமாக ஒதுக்கப்பட்டது. மேற்படி ராமமூர்த்தியின் வாரிசுகளுக்கிடையே சொத்துக்கள் ஏற்கனவே பாகப்பிரிவினை செய்துக் கொண்டதால், பாகம் பிரிக்க வேண்டிய சொத்துக்கள் எதுவும் இல்லை. எனவே, வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்ய உரிமையே இல்லை. தாவா சொத்து விவரம் மற்றும் சர்வே எண் தவறாகும். வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் மேற்படி பாகப் பிரிவினை குறித்து நன்கு தெரிந்தும் உண்மையை மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர். எனவே, இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

6. **<u>15–ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையின் சுருக்கம் :</u>** வாதிகள் இவ்வழக்கை பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளனர். தாவா சொத்துக்களை பதிவு செய்யக்கூடாது என ஆட்சேபனை எதுவும் வாதிகள் தெரிவிக்கவில்லை. வழக்கு தாக்கல் செய்தவற்கு முன்பு உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 80–ன்கீழ் அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை. ஆவணங்களை முறையாக தயார் செய்து பதிவுக்கு சமர்பிக்கும் பட்சத்தில் அதை பதிவு செய்வதற்கு மறுப்பதற்கு பதிவு சட்டத்தின் கீழ் வழியில்லை. எனவே, தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

7. **<u>கடந்த 15.09.2025 அன்று 2–ஆம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 3, 4 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள கூடுதல் பதிலுரையின் சுருக்கம் :</u>** தாவா சொத்து ராமமூர்த்தி என்பவருக்கு 17.07.1984 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தின்படி பாத்தியப்பட்டது என்பது உண்மை. மேற்படி ராமமூர்த்தி கடந்த 12.11.2007 அன்று காலமாகிவிட்டார். அதன்பிறகு அவரது மனைவி, 3 மகள்கள் மற்றும் மகன் கடந்த 30.06.2010 அன்று ஒரு பாகப்பிரிவினைப் பத்திரம் எழுதி பதிவு செய்துக் கொண்டனர். அதில் உள்ள D அட்டவணை சொத்து 13–ம் பிரதிவாதியின் பாகமாகவும், E அட்டவணை சொத்தானது 2–ம் பிரதிவாதியின் கணவரும், 3, 4 பிரதிவாதிகளின் தகப்பனாருமான மேற்படி மோகன்பாபு என்பவருக்கு ஒதுக்கப்பட்டது. 1–ம் பிரதிவாதி, 9–ம் பிரதிவாதி மற்றும் அவரது தாயார் அலமேலு அம்மாள் ஆகியோருக்கு பணம் ரூ.3,50,000/–ம் ஒதுக்கப்பட்டது. மேற்படி பாகப்பிரிவினைக்கு பின்னிட்டு 13–ம் பிரதிவாதி அவருக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்தையும், மேற்படி மோகன்பாபு அவருக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்தையும் அனுபவித்து வந்தனர். அதன் பின்னிட்டு மேற்படி மோகன்பாபு கடந்த 16.08.2018 அன்று 2 முதல் 4 வரை பிரதிவாதிகளை அவரது வாரிசுகளாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார். மேற்படி பாகப்பிரிவினைப் பத்திரத்தில் மோகன்பாபுவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களில் 2 முதல் 4 வரை

பிதிவாதிகளை தவிர வேறு யாருக்கும் எவ்வித உரிமையும் இல்லை. மேற்படி பாகப்பிரிவினையில் 1, 2 வாதிகள் மற்றும் 14–ம் பிரதிவாதியின் தாயாருமான 13–ம் பிரதிவாதிக்கு D அட்டவணை சொத்துக்கள் பாகமாக ஒதுக்கப்பட்டு அதை அவர் அனுபவித்து வருகிறார், இந்த விவரம் வாதிகளுக்கும், 14–ம் பிரதிவாதிக்கும் நன்கு தெரியும். தாவா சொத்துக்கள் கூட்டுக் குடும்ப சொத்துக்கள் அல்ல. வாதிகளின் தாயாரான 13–ம் பிரதிவாதி, அவரது தகப்பனாரின் நேரடி வாரிசு என்ற வகையில் மேற்படி 30.06.2010 தேதியிட்ட பாகப்பிரிவினைப் பத்திரத்தில் சொத்துக்களை அடையப்பெற்று அனுபவித்து வருகிறார். எனவே, வாதிகள் தாவா சொத்தில் பாகம் கேட்கும் உரிமையே இல்லை. வாதிகள் தாவா சொத்தை எந்த காலத்திலும் அனுபவித்ததில்லை. எனவே தாவாவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

8. இவ்வழக்கின் வழக்குரை, பதிலுரை மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் கடந்த 14.12.2022 அன்று கீழ்க்கண்ட வழக்கெழு வினாக்கள் வனையப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| 1. | Whether the Plaintiffs are entitled for any share in the suit property? |
| 2. | Is it true that partition in respect of suit schedule property effected on 30.06.2010 vide Document No.5144/2010 as alleged by defendants? |
| 3. | Whether the plaintiffs are entitled for preliminary decree as prayed for? |
| 4. | Whether the plaintiffs are entitled for separate possession of the suit property in respect of their shares? |
| 5. | To what other relief? |

9. இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் 2–ம் வாதி திரு. சுரேஷ் என்பவர் தனது வழக்குரையை சார்ந்து நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து தன்னை வா.சா.1–

ஆக விசாரித்துக்கொண்டு சாட்சியமளித்துள்ளார். வாதிகள் தரப்பில் வா.சா.1–ன் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

10. 2 முதல் 4 வரை பிரதிவாதிகள் தரப்பில் 2–ம் பிரதிவாதி திருமதி. உமாலட்சுமி என்பவர் தனது பதிலுரையை சார்ந்து பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்து தன்னை பி.வா.சா–1 ஆக விசாரித்துக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார். 2 முதல் 4 வரை பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1–ன் மூலம், பி.வா.சா.ஆ.1 முதல் 4 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

11. வாதிகள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், தாவா சொத்தானது வாதிகளின் தாய்வழி தாத்தாவும், 1, 9, 13 பிரதிவாதிகளின் தகப்பனாருமான ராமமூர்த்தி என்பவருக்கு வா.சா.ஆ.1–ஆன 17.07.1984 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தின்படி பாத்தியப்பட்டது என்றும், மேற்படி ராமமூர்த்தி கடந்த 12.11.2007 அன்றும், அவரது மனைவியான அலமேலு அம்மாள் என்பவர் 17.01.2015 அன்றும் காலமாகிவிட்டார்கள் என்றும், அவர்களுக்கு 1, 9, 13–ம் பிரதிவாதிகள் மட்டுமே 3 மகள்கள் என்ற வகையில் வாரிசுகள் என்றும், எனவே, மேற்படி மூவருக்கும் தாவா சொத்தில் தலா 1/3 பாகம் உரிமை உள்ளது என்றும், வாதிகள் மற்றும் 14–ம் பிரதிவாதியின் தாயாரான 13–ம் பிரதிவாதிக்கு பாகமாக வரும் மேற்படி 1/3 பாகத்தில், வாதிகளுக்கு தலா 1/9 பாகம் உரிமை உள்ளது என்றும், தாவா சொத்தினை வாதிகளும், 1 முதல் 14 வரை பிரதிவாதிகள் கூட்டாக அனுபவித்து வருகின்றனர் என்றும், எனவே, வாதிகள் வழக்கில் கோரியவாறு தீர்ப்பாக வேண்டும் என்றும் வாதிட்டார்.

12. வாதிகள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் மேலும், 2 முதல் 4 வரை பிரதிவாதிகள் தரப்பில், தாவா சொத்தினை வாதிகளின் பாட்டியான அலமேலு அம்மாள் 1, 9, 13 பிரதிவாதிகள், 2–ம் பிரதிவாதியின்

கணவரான மோகன்பாபு என்பவருடன் சேர்ந்து கடந்த 30.06.2010 அன்று எழுதிக் ஒரு பாகப்பிரிவினைப் பத்திரம் எழுதிக் கொண்டதாகவும், அதில் மேற்படி மோகன்பாபுவுக்கும், வாதிகளின் தாயாரான 13–ம் பிரதிவாதிக்கும் மட்டும் சொத்துக்கள் பாகமாக ஒதுக்கப்பட்டதாக கூறியுள்ளது பொய் என்றும், மாறாக வாதிகளின் தாய்வழி தாத்தாவான ராமமூர்த்தி என்பவருக்கு 1, 9, 13 பிரதிவாதிகளை தவிர வேறு வாரிசுகள் யாரும் இல்லை என்றும், ஆனால் பி.வா.சா.ஆ1 பாகப்பிரிவினைப் பத்திரத்தில் 1–ம் பிரதிவாதியின் மகனான மோகன்பாபு என்பவரை மேற்படி ராமமூர்த்தி என்பவரின் மகன் என மோசடியாக சொல்லி பாகப்பிரிவினைப் பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும், அது குறித்து சாட்சியம் அளித்துள்ள பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் தனது கணவரான மோகன்பாபு, 1–ம் பிரதிவாதியின் மகன் என்று ஒப்புக்கொண்டுள்ள நிலையில், அவரை மேற்படி ராமமூர்த்தி தத்து எடுத்துக்கொண்டதாக சொல்லியுள்ளது பதிலுரையிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ எங்கேயும் சொல்லப்படவில்லை என்றும், எனவே, மோகன்பாபுவின் இறப்பு மற்றும் வாரிசு சான்றான பி.வா.சா.ஆ.3, 4–ல் மோகன்பாபுவின் தகப்பனார் பெயர் ராமமூர்த்தி என மோசடியாக குறிப்பிட்டு இறப்பு மற்றும் வாரிசு சான்று பெறப்பட்டுள்ளது என்றும், எனவே, அந்த ஆவணங்கள் மோசடியான ஆவணங்கள் என்றும், எனவே, அவைகள் தாவா சொத்தில் உள்ள வாதியின் உரிமையை கட்டுப்படுத்தாது என்றும், அதே போன்று பி.வா.சா.ஆ1 பாகப்பிரிவினைப் பத்திரமும் தாவா சொத்தில் உள்ள வாதிகளின் உரிமையை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது என்றும், எனவே, வாதிகள் வழக்கில் கோரியவாறு தீர்ப்பாக வேண்டும் என்றும் வாதிட்டார்.

13. 2 முதல் 4 வரை பிரதிவாதிகள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், தாவா சொத்தானது 1, 9, 13 பிரதிவாதிகளின் தகப்பனாரான ராமமூர்த்தி என்பவருக்கு அவரது தாயார் எழுதி வைத்த வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் பத்திரத்தின்படி பாத்தியப்பட்டது என்றும், அந்த சொத்தை

மேற்படி ராமமூர்த்தி அனுபவித்து வந்து ஆவணம் எதுவும் எழுதி வைக்காமல் காலமாகிவிட்டார் என்றும், அவர் காலமான பிறகு அவரது முதல்நிலை வாரிசுகளும், மனைவியுமான அலமேலு அம்மாள், மகள்களான 1, 9, 13 பிரதிவாதிகள் கடந்த 30.06.2010 அன்று பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தை எழுதிக் கொண்டனர் என்றும், மேற்படி ராமமூர்த்தி, 1–ம் பிரதிவாதியின் மகனும், 2–ம் பிரதிவாதியின் கணவரும், 3, 4 பிரதிவாதிகளின் தகப்பனாருமான மோகன்பாபு என்பவரை தனது மகனாக கருதி சிறு வயதில் இருந்தே தத்து மகனாக வளர்த்து வந்ததால், மேற்படி மோகன்பாபுவையும் மேற்படி ராமமூர்த்தியின் மகன் என்று குறிப்பிட்டு பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினைப் பத்திரத்தில் E–அட்டவணை சொத்து பாகமாக ஒதுக்கப்பட்டள்ளது என்றும், அந்த பாகப்பிரிவினைப் பத்திரத்தில் உள்ள D அட்டவணை சொத்து வாதிகள் மற்றும் 14–ம் பிரதிவாதியின் தாயாரான 13–ம் பிரதிவாதிக்கு பாகமாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், எனவே, தாவா சொத்தானது வாதிகளின் தாயாரான 13–ம் பிரதிவாதிக்கு அவரது தகப்பனார் வழியில் வந்த சொத்து என்பதால், வாதிகளின் தாயாரின் ஆயுட்காலம் வரை தாவா சொத்தில் வாதிகள் பாகம் கேட்க சட்டப்படி உரிமை இல்லை என்றும், எனவே, வாதிகள் பாகம் கேட்டு தாக்கல் செய்துள்ள இவ்வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் வாதிட்டார்.

14. **<u>1 முதல் 4 வரை எழுவினாக்களுக்கு தீர்வு</u>** தாவா சொத்துக்களை 3 பாகங்களாக பிரித்து அதில் வாதிகளின் தாயாரான 13–ம் பிரதிவாதிக்கு பாகமாக வரும் 1/3 பாகத்தில் வாதிகளுக்கு தலா 1/9 பாகம் கேட்டு வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.

15. தாவா சொத்தானது வாதிகளின் தாயார் வழி தாத்தாவும், 1, 9, 13 பிரதிவாதிகளின் தகப்பனாருமான ராமமூர்த்தி என்பவருக்கு கடந்த 17.07.1984 அன்று அவரது தாயாரான ராஜம்மாள் என்பவர் எழுதி வைத்த செட்டில்மெண்ட்

பத்திரத்தின்படி பாத்தியப்பட்டது என்ற வாதிகள் தரப்பு வழக்கை 2 முதல் 4 வரை பிரதிவாதிகள் தரப்பு பதிலுரையிலும், சாட்சியத்திலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி 17.07.1984 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரம் வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.1–ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ள வாசகங்களை ஆய்வு செய்யும்போது, அந்த ஆவணத்தில் உள்ள தாவா சொத்தினை மேற்படி ராமமூர்த்தி முழு உரிமையுடன் அனுபவித்துக் கொள்ள வேண்டியது என்று எழுதப்பட்டுள்ளது என்பதும், அச்சொத்தின் பேரில் எவ்வித நிபந்தனையும் விதிக்கப்படவில்லை என்பதும் தெரிய வருகின்றது.

16. வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் பத்திரத்தின்படி தாவா சொத்தினை அடையப் பெற்ற மேற்படி ராமமூர்த்தி கடந்த 12.11.2007 அன்று அவரது மனைவியான அலமேலு அம்மாள், மகள்களான 1, 9, 13 பிரதிவாதிகளை அவரது வாரிசுகளாக விட்டுவிட்டு காலமாகியுள்ளது வா.சா.ஆ.2–ஆன இறப்பு சான்று மற்றும் வா.சா.ஆ.4–ஆன வாரிசு சான்றின் மூலம் தெரிய வருகிறது. அதன்பின்னிட்டு மேற்படி ராமமூர்த்தியின் மனைவியான அலமேலு அம்மாள் என்பவர் கடந்த 17.01.2015 அன்று காலமாகியுள்ளது அவரது இறப்பு சான்றான வா.சா.ஆ.3–ன் மூலம் தெரிய வருகின்றது.

17. மேற்படி ராமமூர்த்தி என்பவருக்கு அலமேலு அம்மாள் மனைவி என்பதையும், 1, 9, 13 பிரதிவாதிகள் மகள்கள் என்பதையும், 2 முதல் 4 வரை பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள பதிலுரையிலும், கூடுதல் பதிலுரையிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் அந்த பதிலுரையிலோ, கூடுதல் பதிலுரையிலோ 1–ம் பிரதிவாதியின் மகனும், 2–ம் பிரதிவாதியின் கணவரும், 3, 4 பிரதிவாதிகளின் தகப்பனாருமான மேற்படி மோகன்பாபு என்பவரை அவரது தாத்தாவான மேற்படி ராமமூர்த்தி என்பவர் சிறு வயதிலேயே மகனாக தத்து எடுத்துக்கொண்டு வளர்த்து வந்ததாக எதையும் குறிப்பிட்டு

கூறவில்லை. அவ்வாறான நிலையில், பி.வா.சா.1–ஆக சாட்சியம் அளித்துள்ள 2–ம் பிரதிவாதி தனது குறுக்கு விசாரணையில் மேற்படி மோகன்பாபுவை அவரது தாத்தாவான மேற்படி ராமமூர்த்தி இளம் வயதிலேயே மகனாக தத்து எடுத்துக் கொண்டார் என்பதை ஏற்றுக் கொள்ளும் வகையில் இல்லை.

18. மேலும் பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், தனது கணவரான மோகன்பாபு என்பவரது அனைத்து ஆவணங்களிலும் அவரது தகப்பனார் பெயர் ராமமூர்த்தி என்றும், இனிஷியல் 'R' என்றே இருக்கும் என்றும் கூறியிருப்பினும் அதை நிரூபிக்க மேற்படி மோகன்பாபுவின் இறப்பு மற்றும் வாரிசு சான்றான பி.வா.சா.ஆ.3, 4–ஐ தவிர வேறு ஆவணம் எதையும் 2 முதல் 4 வரை பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யவில்லை. எனவே, 2–ம் பிரதிவாதியின் கணவரான மேற்படி மோகன்பாபு என்பவரை, மேற்படி ராமமூர்த்தி என்பவர் இளம் வயதிலேயே மகனாக தத்து எடுத்து வளர்த்து வந்தார் என்ற பி.வா.சா.1–ன் சாட்சியம் இவ்விடத்தில் நிராகரிக்கப்படுகிறது.

19. இவ்விடத்தில், இந்து வாரிசுரிமைச் சட்டம், பிரிவு 8–ன் வரையறையையும், அட்டவணையில் உள்ள முதல்நிலை வாரிசுகளின் அட்டவணையையும் காண்பது அவசியமாகின்றது.

> ***8. <u>General rules of succession in the case of males :</u> The property of a male Hindu dying intestate shall devolve according to the provisions of this Chapter:—***
>
> ***(a) firstly, upon the heirs, being the relatives specified in class I of the Schedule;***
>
> ***(b) secondly, if there is no heir of class I, then upon the heirs, being the relatives specified in class II of the Schedule;***
>
> ***(c) thirdly, if there is no heir of any of the two classes, then upon the agnates of the deceased; and***
>
> ***(d) lastly, if there is no agnate, then upon the cognates of the deceased.***

**Schedule**

**Class I**

***Son; daughter; widow; mother; son of a pre-deceased son; daughter of a pre-deceased son; son of a pre-deceased daughter; daughter of a pre-deceased daughter; widow of a pre-deceased son; son of a pre-deceased son of a pre-deceased son; daughter of a pre-deceased son of a pre-deceased son; widow of a pre-deceased son of a pre-deceased son [son of a predeceased daughter of a pre-deceased daughter; daughter of a pre-deceased daughter of a pre-deceased daughter; daughter of a pre-deceased son of a pre-deceased daughter; daughter of a pre-deceased daughter of a pre-deceased son].***

என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

20. அதாவது, இந்து வாரிசுரிமைச் சட்டம், 1956 அமலான பிறகு, எந்தவித ஆவணமும் எழுதி வைக்காமல் காலமாகும் ஒரு இந்து ஆணின் சொத்துக்கள் யாவும் பிரிவு 8–ன்கீழ் அவரது வாரிசுகளுக்கு சென்றடையும் என்று சொல்லப்பட்டுள்ளது. பிரிவு 8–ன்படி, முதலில் அட்டவணையில் உள்ள முதல்நிலை வாரிசுகளுக்கும், அவர்கள் யாருமில்லை எனில், இரண்டாம் நிலை வாரிசுகளுக்கும் செல்லும் என்றவாறு வரையறுக்கப்பட்டுள்ளது. மேலும், அட்டவணையில் உள்ள முதல்நிலை வாரிசுகளில், மகன், மகள், மனைவி, காலமான மகன் அல்லது மகளின் மகன்கள், மகள்கள் என்றுதான் உள்ளதே தவிர, உயிருடன் உள்ள மகளின் மகன்கள் மற்றும் மகள்களும் காலமான ஒரு இந்து ஆணின் வாரிசுகள் என்று வரையறுக்கப்படவில்லை என்பதை அறிய முடிகின்றது.

21. அவ்வகையில், இவ்வழக்கை பொறுத்த வரை, தாவா சொத்தின் உரிமையாளராக இருந்த மேற்படி ராமமூர்த்தி என்பவர் தாவா சொத்தினை பொறுத்து ஆவணம் எதையும் எழுதி வைக்காமல் கடந்த 12.11.2007 அன்று

காலமாகிவிட்ட நிலையில், இந்து வாரிசுரிமை சட்டம் பிரிவு 8 மற்றும் அட்டவணையின்படி இவ்வழக்கின் 1, 9, 13 பிரதிவாதிகள் மற்றும் அவர்களது தாயாரும், மேற்படி ராமமூர்த்தியின் மனைவியுமான அலமேலு அம்மாள் ஆகிய நான்கு பேர் மேற்படி ராமமூர்த்தியின் முதல் நிலை வாரிசுகள் ஆகின்றார்கள். மேற்படி ராமமூர்த்தியின் மகளான 13–ம் பிரதிவாதி உயிருடன் உள்ள நிலையில், 13–ம் பிரதிவாதியின் மகன்கள் மற்றும் மகளான வாதிகள் மற்றும் 14–ம் பிரதிவாதி, மேற்படி ராமமூர்த்தியின் முதல் நிலை வாரிசுகள் இல்லை என்பது, பிரிவு 8 மற்றும் வாரிசுகள் அட்டவணையின் மூலம் தெளிவாக தெரிய வருகின்றது.

22. மேலும், தாவா சொத்தானது, மேற்படி ராமமூர்த்தி என்பவருக்கு வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் பத்திரத்தின்படி பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்பதால், அந்த சொத்தை பொறுத்து அவரது மனைவி மற்றும் மகள்களான மேற்படி அலமேலு அம்மாள், 1, 9, 13 பிரதிவாதிகள் கடந்த 30.06.2010 அன்று பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தை எழுதிக் கொண்டுள்ளனர். அந்த பாகப்பிரிவினைப் பத்திரத்தில் 1–ம் பிரதிவாதியின் மகனும், 2–ம் பிரதிவாதியின் கணவருமான மேற்படி மோகன்பாபு என்பவரை, மேற்படி ராமமூர்த்தியின் மகன் என குறிப்பிட்டு அவருக்கும் ஒரு பாகம் ஒதுக்கி பாகப்பிரிவினைப் பத்திரம் எழுதப்பட்டுள்ளதை காண முடிகின்றது.

23. பி.வா.சா.ஆ.1 பாகப்பிரவினைப் பத்திரத்தில் பாகம் பிரித்துக் கொள்ளப்பட்டுள்ள சொத்துக்கள் மேற்படி ராமமூர்த்தி என்பவரது தனிப்பட்ட சொத்துக்கள் என்பதால், அவரது நேரடி / முதல் நிலை வாரிசுகளான மேற்படி மனைவி அலமேலு அம்மாள் மற்றும் மகள்களான 1, 9, 13 பிரதிவாதிகள், அவர்கள் குடும்ப உறுப்பினர்கள் வேறு யாரையும் சேர்த்து பாகப்பிரிவினைப் பத்திரத்தை எழுதிக் கொள்வதில் எந்த தடையும் இருப்பதாக இந்நீதிமன்றம் கருதவில்லை. மேற்படி நால்வரை தவிர வேறு யாருக்கும் பி.வா.சா.ஆ.1 பாகப் பிரிவினைப்

பத்திரத்தில் சொத்துக்கள் பாகம் ஒதுக்குவதில் ஆட்சேபனை இருந்திருந்தால், பாகப்பிரிவினை பத்திரம் எழுதிய சமயத்திலேயே அந்த ஆவணத்திற்கு மேற்படி நால்வரும் ஆட்சேபனை தெரிவித்திருக்காலம்.

24. 1, 9, 13 பிரதிவாதிகள் மேற்படி மோகன்பாபுவை பாகப்பிரிவினைப் பத்திரத்தில் சேர்த்து எழுதிக் கொள்வதற்கு ஆட்சேபனை தெரிவிக்காத காரணத்தால் தான், பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினைப் பத்திரம் எழுதி பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, தற்போது பி.வா.சா.ஆ1 பாகப் பிரிவினைப் பத்திரத்தை குறித்து அதிலுள்ள தரப்பினர்களான மேற்படி அலமேலு அம்மாள், 1, 9, 13 பிரதிவாதிகள் மட்டுமே கேள்வி எழுப்ப இயலுமே தவிர அந்த பாகப்பிரிவினைப் பத்திரத்திற்கு சம்மந்தப்படாத அல்லது பாகப் பிரிவினைப் பத்திரத்தில் உள்ள இவ்வழக்கு சொத்தில் உரிமை எதுவும் இல்லாத இவ்வழக்கின் வாதிகள் மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தை குறித்து கேள்வி எழுப்ப இயலாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

25. மேலும், இவ்வழக்கின் 2–ம் வாதி, வா.சா.1–ஆக சாட்சியம் அளித்த போது, அவரை கடந்த 18.03.2024 அன்று குறுக்கு விசாரணை செய்த போது, கீழ்கண்டவாறு பதில் அளித்துள்ளதை இவ்விடத்தில் காண்பது அவசியமாகின்றது.

> ***"...... தாவா சொத்து குறித்து அலமேலு அம்மாள் மற்றும் அவருடைய மகள்கள், மகன் மோகன்பாபு ஆகிய 5 நபர்களும் சேர்ந்து 30.06.2010–ல் பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் செய்து கொண்டு பிரித்துக் கொண்டார்கள் என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. என் தாயார் இறந்து போன ராமமூர்த்திக்கு நேரடி வாரிசு என்றால், சரிதான். நான் நேரடியான வாரிசு இல்லை என்றால், சரிதான். இறந்து போன ராமமூர்த்திக்கு நானும் என் சகோதரரும் நேரடி வாரிசு இல்லை என்றும், என் தாயார் தான் நேரடி வாரிசு என்றும் என்றால், சரிதான். 30.06.2010–ல் பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் 1–வது பிரதிவாதி, 9–ம்***

> ***பிரதிவாதி, 13–ம் பிரதிவாதி மற்றும் மோகன்பாபு ஆகியோர் பதிவு செய்த விவரம் அனைத்தும் 1–வது பிரதிவாதி, 9–ம் பிரதிவாதி, 13–ம் பிரதிவாதி மற்றும் மோகன்பாபு ஆகியோருக்கு தெரியும் என்றால், அதை பற்றி எனக்கு தெரியாது. என் தாயாருக்கு பாகப் பிரிவினை பத்திரத்தில் எந்த பாகம் ஒதுக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியாது. பாகப் பிரிவினை செய்தது எனக்கு தெரியாது.***

என்று கூறியுள்ளார்.

26. அதேபோல், அதே தினம் செய்த குறுக்கு விசாரணையில் மேலும்,

> ***"..... 30.06.2010–ல் தாவா சொத்தில் பாகப் பிரிவினை பத்திரம் சட்டப்படி செல்லும், செல்லாது என்று சொல்வது என் தாயாருக்கு தான் உரிமை உள்ளது என்றால், தாயாருக்கும் உரிமை உள்ளது, எனக்கும் உரிமை உள்ளது. இந்த வழக்கில் என் தாயாரை ஒரு தரப்பினராக சாட்சியாக விசாரிக்கலாமா என்றால், விசாரிக்க உள்ளேன். என் தாயார் மற்றும் அவர் உடன்பிறந்த சகோதரிகள், சகோதரர் மோகன்பாபு ஆகியோர் 30.06.2010–ல் பாகப் பிரிவினை பத்திரம் செய்துக் கொண்டார்கள் என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது.***

என்றும் கூறியுள்ளார். ஆக, வாதிகளின் தாயாரான 13–ம் பிரதிவாதி, 1, 9 பிரதிவாதிகள், அலமேலு அம்மாள் மற்றும் மேற்படி மோகன்பாபு என்பவர்களுக்கிடையே ஏற்பட்ட பாகப்பிரிவினைப் பத்திரத்தை வா.சா.1 மறுக்கவில்லை, மாறாக, தெரியாது என்றே கூறுகின்றார்.

27. வா.சா.1 தனது 27.10.2025 தேதியிட்ட குறுக்கு விசாரணையின் பத்தி 2–ல், 2021–ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பிரதிவாதிகள் பதிலுரை தாக்கல் செய்த போதுதான் மேற்படி பாகப்பிரிவினைப் பத்திரம் குறித்து தெரியும் என்று கூறியுள்ளார். அதேபோல், 18.03.2024 தேதியிட்ட குறுக்கு விசாரணையில், இவ்வழக்கில் தனது தாயாரை ஒரு சாட்சியாக விசாரிக்கலாமா என்ற கேள்விக்கு,

விசாரிக்க உள்ளேன் என்றும் கூறியுள்ளார். ஆக, வாதிகளுக்கும், அவர்களது தாயாரான 13–ம் பிரதிவாதிக்கும் இடையே பிரச்சினை எதுவும் இல்லை என்பது தெரிய வருகின்றது.

28. வாதிகள் கூறுவதைப் போல், மேற்படி பாகப்பிரிவினைப் பத்திரமே ஏற்படவில்லை என்பது உண்மையென்றால், வாதிகள் அவர்களது தாயாரான 13–ம் பிரதிவாதியின் மூலமாக தக்க சட்ட நடவடிக்கையை எடுத்திருக்கலாம். அல்லது, வாதிகளின் தாயாரான 13–ம் பிரதிவாதி இவ்வழக்கில் தோன்றா தரப்பினராகியிருந்தாலும், நீதிமன்ற அனுமதியுடன் அவரை ஒரு சாட்சியாக விசாரித்து பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினைப் பத்திரத்தை மறுத்திருக்கலாம். ஆனால், அதுபோன்ற நடவடிக்கைகள் எதையும் வாதிகள் தரப்பில் எடுக்காத நிலையில், பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினைப் பத்திரம் உண்மையென்றே இந்நீதிமன்றம் முடிவு செய்ய வேண்டியுள்ளது.

29. பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினைப் பத்திரத்தில், இவ்வழக்கு சொத்தின் ஒரு பகுதி, 'D' அட்டவணை சொத்தாக வாதிகள் மற்றும் 14–ம் பிரதிவாதியின் தாயாரான 13–ம் பிரதிவாதியின் பாகமாக ஒதுக்கப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது. இவ்விடத்தில், இந்து வாரிசுரிமை சட்டம், பிரிவு 14(1)–ன் வரையறையை காண்பதும் அவசியமாகின்றது.

***<u>14. Property of a female Hindu to be her absolute property :</u>***

***(1) Any property possessed by a female Hindu, whether acquired before or after the commencement of this Act, shall be held by her as full owner thereof and not as a limited owner.***

***<u>Explanation :</u> In this sub-section, “property” includes both movable and immovable property acquired by a female Hindu by inheritance or devise, or at a partition, <u>or in lieu of maintenance or arrears of</u>***

***maintenance,** or by gift from any person, whether a relative or not, before, at or after her marriage, or by her own skill or exertion, or by purchase or by prescription, or in any other manner whatsoever, and also any such property held by her as stridhana immediately before the commencement of this Act.*

என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

30. ஆக, தாவா சொத்தானது 13–ம் பிரதிவாதியின் தகப்பனாரான மேற்படி ராமமூர்த்தி என்பவருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்பதால் அதில் ராமமூர்த்தியின் மனைவி மற்றும் மகள்களான 1, 9, 13 பிரதிவாதிகளுக்கு மட்டுமே உரிமையுள்ளது என்றும், உயிருடன் உள்ள மகள்வழி பேரன்களான வாதிகளுக்கு உரிமையில்லை என்றும் மேலே கண்டவாறு முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில், பிரிவு 14(1)–ன்கீழும் வாதிகளுக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் ஏற்படவில்லை. அதாவது, வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் பத்திரத்தின் மூலம் 1, 9, 13 பிரதிவாதிகளின் தகப்பனார் அடையப்பெற்ற தாவா சொத்தினை பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினைப் பத்திரத்தின் மூலம் பாகம் பிரித்துக் கொண்டதில், தாவா சொத்தின் ஒரு பகுதி வாதிகளின் தாயாருக்கும், மற்றொரு பகுதி 2–ம் பிரதிவாதியின் கணவரும், 3, 4 பிரதிவாதிகளின் தகப்பனாருமான மேற்படி மோகன்பாபு என்பவரின் பாகமாக சென்றுள்ள நிலையில், பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினைப் பத்திரத்தில் வாதிகளின் தாயார் 'D' அட்டவணையில் அடையப்பெற்ற தாவா சொத்தின் ஒரு பகுதியானது, பிரிவு 14(1)–ன்படி வாதிகளின் தாயாரின் தனிப்பட்ட சொத்தாகின்றது. அவ்வகையில், அந்த சொத்தில் வாதிகளின் தாயாரான 13–ம் பிரதிவாதி உயிருடன் உள்ள நிலையில், அதில் பாகம் கேட்க வாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை.

31. ஆக, வாதிகள் கூறுவதைப் போல், ஒரு வேளை தாவா சொத்தினைப் பொறுத்து பாகப்பிரிவினையே எதுவும் நடக்கவில்லை என்பது வழக்கிற்காக வேண்டி உண்மையாகவே இருந்தாலும், தாவா சொத்தானது 1, 9, 13–ம்

பிரதிவாதிகளின் தகப்பனாரின் தனிப்பட்ட சொத்து என்பதால், 1, 9, 13 பிரதிவாதிகள் உயிருடன் உள்ள வரையில் அவர்களின் வாரிசுகள் யாரும் பாகம் கேட்க உரிமையில்லை.

32. அவ்வகையிலும், வாதிகள் வழக்கில் கோரிய பாகப்பிரிவினைப் பரிகாரத்தை வழங்க இயலாத நிலை உள்ளது. எனவே, தாவா சொத்தானது 1, 9, 13 பிரதிவாதிகளின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்பதாலும், அந்த சொத்தினைப் பொறுத்து கடந்த 30.06.2010 அன்று 1, 9, 13 பிரதிவாதிகள் மற்றும் அவர்களது தாயாரான அலமேலு அம்மாள் மற்றும் 2–ம் பிரதிவாதியின் கணவரான மேற்படி மோகன் பாபு ஆகியோர்கள் சேர்ந்து பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினைப் பத்திரத்தை எழுதி பாகம் பிரித்துக் கொண்டுள்ளதாலும் தாவா சொத்தில் வாதிகளுக்கு எவ்வித உரிமையோ, பாகமோ இல்லை. எனவே, வாதிகள் வழக்கில் கோரும் பாகப்பிரிவினைக்கான முதல் நிலை தீர்ப்பாணையோ, தாவா சொத்தினைப் பொறுத்து எவ்வித வில்லங்கமும் ஏற்படுத்தக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரமோ வாதிகளுக்குக் கிடைக்கத்தக்கதல்ல என்று முடிவு செய்து 1 முதல் 4 வரையான எழுவினாக்களுக்க தீர்வு காணப்படுகின்றது.

33. <u>**எழுவினா 5–க்கான தீர்வு :**</u> 1 முதல் 4 வரையான எழுவினாக்களுக்கு காணப்பட்ட தீர்வின் அடிப்படையில் இவ்வழக்கின் தரப்பினர்கள் அடையத்தக்க இதர பரிகாரங்கள் வேறு ஏதுமில்லை என்றும், வழக்கின் தன்மையை கருதியும், தரப்பினர்களின் உறவு நிலையை கருத்தில் கொண்டும் அவரவர் செலவுத் தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் முடிவு செய்து எழுவினா 5–க்கு தீர்வு காணப்படுகின்றது.

34. இறுதியாக, பாகப்பிரிவினைக்கான முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரியும், அதனடிப்படையில் பாகம் பிரித்துத் தர முன்வராவிட்டால் நீதிமன்ற ஆணையர் மூலம் பாகம் பிரித்து ஒதுக்கி இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக்

கோரியும், தாவா சொத்தினைப் பொறுத்து எவ்வித வில்லங்கமும் ஏற்படுத்தக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரமும் கேட்டு தாக்கல் செய்துள்ள இவ்வழக்கில், மேற்படி பரிகாரங்கள் எதுவும் வாதிகளுக்குக் கிடைக்கத்தக்கதல்ல என்று முடிவு செய்து வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகின்றது. செலவுத் தொகை இல்லை.

இத்தீர்ப்புரையானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026–ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 27–ஆம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

YUVARAJ

Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam
Date: 2026.03.27 13:01:45 +0530

**சிறப்பு சார்பு நீதிபதி,**

நில ஆர்ஜித வழக்குகளுக்கான

சிறப்பு சார்பு நீதிமன்றம், அரக்கோணம்.

**பிற்சேர்க்கை :**

**வாதிகள் தரப்பு சாட்சிகள் :**

வா.சா.1 திரு. J. சுரேஷ் (2–ம் வாதி)

**2 முதல் 4 வரை பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :**

பி.வா.சா.1 திருமதி. உமா லட்சுமி (2–ம் பிரதிவாதி)

**15–ம் பிரதிவாதி தரப்பு சாட்சிகள் :** இல்லை

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :**

| | |
|---|---|
| வா.சா.ஆ1 | 17.07.1984 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்று நகல் |
| வா.சா.ஆ2 | ராமமூர்த்தி என்பவரது இறப்பு சான்றின் அசல் |
| வா.சா.ஆ3 | அலமேலு அம்மாள் என்பவரது இறப்பு சான்றின் அசல் |

| | |
|---|---|
| வா.சா.ஆ4 | ராமமூர்த்தி என்பவரது வாரிசு சான்றின் அசல் |
| வா.சா.ஆ5 | ராமமூர்த்தி என்பவர் பெயரில் 09.10.2007 அன்று வழங்கிய சொத்து வரி மற்றும் குடிநீர் வரி ரசீது. |
| வா.சா.ஆ6 | ராமமூர்த்தி பெயரில் உள்ள மின் கட்டண ரசீதுகள் (6 எண்ணிக்கை) |
| வா.சா.ஆ7 | கணிணி வழிகாட்டி மதிப்பீடு சான்று |

**<u>2 முதல் 4 வரை பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u>**

| | |
|---|---|
| பி.வா.சா.ஆ–1 | 30.06.2010 தேதியிட்ட பாகப்பிரிவினைப் பத்திர சான்று நகல் |
| பி.வா.சா.ஆ–2 | 29.12.2022 தேதியிட்ட கணினி வில்லங்க சான்று |
| பி.வா.சா.ஆ–3 | மோகன் பாபு என்பவரின் இறப்பு சான்று |
| பி.வா.சா.ஆ–4 | மோகன் பாபு என்பவரின் வாரிசு சான்று |

**<u>15–ம் பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் :</u>** இல்லை

YUVARAJ

Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam
Date: 2026.03.27 13:01:56 +0530

**சிறப்பு சார்பு நீதிபதி,**

நில ஆர்ஜித வழக்குகளுக்கான

சிறப்பு சார்பு நீதிமன்றம், அரக்கோணம்.

**<u>சி.சா.நீ.ம, அரக்கோணம்</u>**

**அ.வ. எண் 118/2025**

சீரான / வரைவு தீர்ப்புரை

நாள் : 27.03.2026